**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சிவகாசி.**
**முன்னிலை :– திரு.அ. விஜயபாரதி, பி.ஏ., பி.எல்.,**
நீதித்துறை நடுவர் எண்.2, சிவகாசி.
2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ஆம் நாள் புதன்கிழமை
(திருவள்ளுவராண்டு 2056, மாசி திங்கள் 27 ஆம் நாள்)
**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.214/2020**

அரசுக்காக : காவல் ஆய்வாளர்,
சிவகாசி கிழக்கு காவல் நிலையம்.
குற்ற எண்.10/2020. .... குற்றமுறையிடுபவர்

/எதிராக/

அந்தோணி குரூஸ் 40/20,
த/பெ.மரியமுத்து,
171, இந்திரா காலனி,
கல்போது, வாடியூர் அஞ்சல்,
விருதுநகர். .... எதிரி

இவ்வழக்கு 11.03.2026 அன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்காக வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எம்.எஸ்.ஆனந்தராஜ் அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற ஆய்வில் இருந்து இன்று இந்த நீதிமன்றம் வழங்கிடும்...

**தீர்ப்புரை**

இவ்வழக்கின் வாதி ராஜா இறந்த நபரான பால்பாண்டியின் தம்பி ஆவார். கடந்த 04.01.2020 ஆம் தேதி இரவு சுமார் 9.45 மணியளவில் சிவகாசி – நாரணாபுரம் மெயின் ரோட்டில் செவன்த்டே பள்ளியின் பக்கத்தில் உள்ள ரவீந்திரா குழாய் கடை அருகில் இருக்கன்குடிக்கு பாதயாத்திரை செல்ல வேண்டி வழக்கில் இறந்துபோன பால்பாண்டி சாட்சிகளான கனி மற்றும் மணிகண்டன் ஆகியோருடன் கிழமேல் ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ரோட்டின் வடபுறம் சாட்சி கனி மண் ரோட்டிலும், கனியை ஒட்டி இறந்துபோன பால்பாண்டி தார் ரோட்டிலும், அவர்களுக்கு பின்னால் சாட்சி மணிகண்டன் வடக்கு பக்கம் மண் ரோட்டிலும் நடந்து சென்று


VIJAYA BHARATHI
Digitally signed by VIJAYA BHARATHI

கொண்டிருந்தபோது, அவர்களுக்கு பின்னால் அதே ரோட்டில் கிழக்கு நோக்கி டி.என்.39 பிடி 1251 என்ற பதிவு எண் கொண்ட ஹீரோ ஹோண்டா பேசன் ப்ரோ என்ற இருசக்கர வாகனத்தை எதிரியானவர் குடிபோதையில் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து கிழமேல் ரோட்டின் வடபக்கம் ஓரத்தில் நடந்து சென்ற பால்பாண்டியின் மீது மோதியதில் பால்பாண்டிக்கு வலது பக்க பின்தலையில் பலத்த இரத்தக்காயமும், வலது பக்க காதில் கிழிந்த காயமும் பலத்த கொடுங்காயம் ஏற்பட்டு இறந்து போயுள்ளார். எனவே எதிரியின் குற்றச் செய்கையானது இதச பிரிவுகள் 279, 304(ஏ) மற்றும் உ/இ மோட்டார் வாகன சட்டம் பிரிவு 185 இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என திருத்தங்கல் காவல் நிலைய ஆய்வாளர் எதிரியின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இந்த வழக்கானது 09-12-2020 ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் வழக்காவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச. பிரிவு 207 இன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3) எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு, வழக்கின் ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டதில் எதிரியின் மீதான குற்றம் குறித்து போதிய முகாந்திரம் இருப்பதாக கருதியதால் எதிரியின் மீதான இதச பிரிவு 304(ஏ) மற்றும் உ/இ மோட்டார் வாகன சட்டம் பிரிவு 185 இன் கீழான குற்றம் குறித்து விளக்கி கூறி வினவியபோது எதிரி தன்னை குற்றவாளி இல்லை என்றார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை வழங்கப்பட்டு வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4) இந்த வழக்கில் அரசுத் தரப்பில் தனது வழக்கினை நிரூபணம் செய்யும் பொருட்டு அ.சா.1 முதல் அ.சா.7 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. சான்றுப்பொருட்கள் எதுவும் அரசு தரப்பில் குறியீடு செய்யப்படவில்லை.

**5.அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்**

இவ்வழக்கின் விபத்தில் இறந்துபோன பால்பாண்டி என்பவர் அ.சா.–1 இராஜாவின் உடன்பிறந்த தம்பி ஆவார். கடந்த 04.01.2020 ஆம் தேதி இரவு 9.50 மணிக்கு வழக்கில் இறந்துபோன பால்பாண்டியும் அவருடன் அ.சா.2 கனி மற்றும் அ.சா.3 மணிகண்டன் ஆகியோர்கள் இருக்கன்குடிக்கு பாதயாத்திரை செல்வதற்காக நாரணாபுரம் செல்லும் சாலையில் இரவீந்திரா குழாய் கடை அருகில் உள்ள செவன்த்டே பள்ளி அருகே நடந்து போகும்போது பால்பாண்டிக்கு இடது பக்கம் அ.சா.2 கனியும், வலது பக்கம் அ.சா.3 மணிகண்டனும், நடுவில் பால்பாண்டியும் நடந்து சென்றுள்ளனர். அப்போது அவர்களுக்கு பின்புறமாக வந்த எதிரி இருசக்கர வாகனத்தினை மதுபோதையில் வேகமாக ஓட்டி வந்து பால்பாண்டி மீது மோதி தூக்கி வீசியதில் பால்பாண்டியின் ஒரு பக்க காதின் பகுதி தனியாக கிழிந்து தொங்கியுள்ளது. இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த எதிரியும் பள்ளத்தில் விழுந்து கிடந்துள்ளார். உடனே சம்பவயிடத்திற்கு அருகில் இருந்த அ.சா.4 வரதராஜனின் உதவியுடன் அடிபட்ட பால்பாண்டியை அ.சா.2 கனி, அ.சா.3 மணிகண்டன் ஆகியோர் ஒரு ஆட்டோவில் ஏற்றி சுப்புராஜ் மருத்துவமனைக்கு அழைத்து சென்றபோது அங்கு அவரை பார்க்கமுடியாது என்று சொன்னதால் பால்பாண்டியை உடனே சிவகாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். அங்கு பால்பாண்டியை பரிசோதித்து பார்த்த மருத்துவர் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக கூறியுள்ளார். உடனே விபத்து சம்மந்தமாக அ.சா.–1 இராஜா சிவகாசி கிழக்கு காவல் நிலையம் சென்று அங்கு பணியிலிருந்த அ.சா.6 உதவி ஆய்வாளர் காசிராஜன் என்பவரிடம் அ.சா.ஆ.1 புகார்மனுவை அளித்துள்ளார். அ.சா.1 இராஜாவிடமிருந்து புகார்மனுவை பெற்றுக்கொண்ட அ.சா.6 உதவி ஆய்வாளர் காசிராஜன் எதிரி மீது நிலையக் குற்ற எண்.10/2020, இதச பிரிவுகள் 279, 304(ஏ) இன் கீழ் அ.சா.ஆ.3 முதல்தகவல் அறிக்கையினை பதிவு செய்துள்ளார்.

5.1. பின்னர் வழக்கினை மேல் விசாரணைக்காக எடுத்துக் கொண்ட அ.சா.7 காவல் ஆய்வாளர் இமானுவேல் ராஜ்குமார் 05.01.2020 ஆம் தேதி அதிகாலை 0.45

மணயளவில் சம்பவயிடம் சென்று சாட்சிகள் அ.சா.5 முருகன் மற்றும் இராஜா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வைமகஜர் மற்றும் அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்னர் சாட்சிகள் அ.சா.1 இராஜா, அ.சா.2 கனி, அ.சா.3 மணிகண்டன், அ.சா.4 வரதராஜன், அ.சா.5 முருகன், பாலகுருசாமி, வைரம், சுந்தரம், பாண்டிச்செல்வி ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களது வாக்குமூலங்களை தனித்தனியே பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கில் இறந்துபோன பால்பாண்டி என்பவரது உடலின் மீது சிவகாசி அரசு மருத்துவமனையின் பிணவறையில் வைத்து பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு அ.சா.ஆ.9 பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். விபத்தில் காயமடைந்த எதிரி அந்தோணிகுரூஸ் மற்றும் இறந்துபோன பால்பாண்டி ஆகியோரை பரிசோதித்த மருத்துவர் தீபன் பாரதி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.6 எதிரியின் விபத்து பதிவேடு, அ.சா.ஆ.7 இறந்த பால்பாண்டியின் விபத்து பதிவேடு ஆகியவற்றை பெற்றுள்ளார். பின்னர் விபத்தில் இறந்துபோன பால்பாண்டி என்பவரது பிரேதத்தின் மீத பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் சாமிநாதன் என்பவரை விசாரித்து அவரது வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.8 பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றுள்ளார். பின்னர் வழக்கினை தனது மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட காவல் ஆய்வாளர் ராஜா விபத்தில் தொடர்புடைய TN 39 பிடி 1251 என்ற பதிவு எண் கொண்ட ஹீரோ இருசக்கர வாகனத்தினை மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்விற்கு அனுப்பி மோட்டார் வாகன ஆய்வாளர் கண்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.9 மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றுள்ளார். பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில் எதிரி நீதிமன்றத்தில் சரண்டர் ஆனதால் கைது செய்யப்படவில்லை. பின்னர் காவல் ஆய்வாளர் தனது புலன்விசாரணை முடித்து சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரி அந்தோணி குரூஸ் என்பவர் மீது 30.09.2020 ஆம் தேதி இதச பிரிவுகள் 279, 304(ஏ) மற்றும் உ/இ மோட்டார் வாகன சட்டம் பிரிவு 185 இன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

6. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றுகின்ற அம்சங்களை குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ)–இன் கீழ் விளக்கி வினவியபோது, எதிரி பொய் சாட்சி என்றும், எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உள்ளது என்று பதிலுரைத்தபோதிலும், எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களோ சான்றுப்பொருள்களோ குறியீடு செய்யப்படவில்லை.

**7. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்**

எதிரி மீது சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 279, 304(ஏ) மற்றும் உ/இ மோட்டார் வாகன சட்டம் பிரிவு 185 இன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்துள்ளாரா? என்பதே ஆகும்.

7.1 அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், அ.சா.1 ராஜா விபத்தில் இறந்து போன பால்பாண்டி என்பவரது உடன்பிறந்த அண்ணன் ஆவார். அ.சா.2 கனி மற்றும் அ.சா.3 மணிகண்டன் ஆகியோருடன் இறந்து போன பால்பாண்டி திருச்செந்தூர் முருகன் கோவிலுக்கு செல்வதற்காக மாலை அணிந்து 04.01.2020 ஆம் தேதியன்று இரவு 09.45 மணியளவில் பாதையாத்திரையாக இருக்கன்குடி மாரியம்மன் கோவிலுக்கு செல்ல நாரணாபுரம் செல்லும் சாலையில் செவன்த்டே பள்ளி அருகே சாலையின் இடது புறமாக சென்று கொண்டிருந்த போது அ.சா.2 கனி, அ.சா.3 மணிகண்டன் ஆகிய இருவருக்கும் நடுவில் பால்பாண்டி நடந்து சென்றுள்ளார். அப்போது அவர்களுக்கு பின்னால் மதுபோதையில் இருசக்கர வாகனத்தில் வந்த எதிரி ஒலி எழுப்பாமல் வந்து பால்பாண்டி மீது மோதி தூக்கி வீசப்பட்டதில் சம்பவ இடத்திலேயே பால்பாண்டி இறந்து போயுள்ளார். விபத்தினை கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 கனி, அ.சா.3 மணிகண்டன், அ.சா.4 வரதராஜன் ஆகியோர் சம்பவம் பற்றியும், எதிரியின் குற்றச் செய்கை பற்றியும் தெளிவாக சாட்சியம் அளித்துள்ளனர். எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால், எதிரிக்கு தக்க தண்டனை வழங்க வேண்டுமென்று வாதிட்டார்.

7.2 மாறாக, எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், அ.சா.2 கனி, அ.சா.3 மணிகண்டன் ஆகிய இருவரும்தான் சம்பவத்தின் போது இறந்து போன பால்பாண்டியுடன் பாதையாத்திரையாக இருக்கன்குடி கோவிலுக்கு சென்றதாக கூறப்படுகிறது. ஆனால் அ.சா.2, அ.சா.3 ஆகிய இருவருமே எதிரியை அடையாளப்படுத்தி எந்த வித சாட்சியமும் அளித்திடவில்லை என்றும், திருச்செந்தூர் கோவிலுக்கு மாலை அணிவித்துவிட்டு இருக்கன்குடி கோவிலுக்கு பாதையாத்திரையாக சென்றோம் என அ.சா.2, அ.சா.3 ஆகிய இருவரும் சாட்சியம் அளித்திருப்பது சந்தேகத்திற்கு இடமளிக்கிறது என்றும், சம்பவத்தின் போது எதிரி தனது வாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்தார் என விபத்தினை நேரில் பார்த்ததாக கூறப்படும் சாட்சிகள் யாரும் சாட்சியம் அளித்திடவில்லை என்றும், எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படாததால் சந்தேகத்தின்பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

8. இந்த வழக்கின் இரு தரப்பு வாதங்களும், அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

8.1. இந்த வழக்கின் விபத்தானது 04.01.2020 ஆம் தேதியன்று இரவு 21.45 மணியளவில் நாரணாபுரம் செல்லும் சாலையில் செவன்த்டே பள்ளி அருகே நடந்ததாக கூறப்படுகிறது. விபத்தினை அ.சா.4 வரதராஜன் என்பவர் மூலம் கேள்விப்பட்டஅ.சா.1 ராஜா சம்பவ இடம் சென்ற போது விபத்தில் அடிப்பட்ட அவரது தம்பி பால்பாண்டியை ஆட்டோவில் ஏற்றிக்கொண்டு எதிரே வந்துள்ளனர். அவர்களுடன் அ.சா.1 ராஜாவும் சிவகாசி பேருந்து நிலையம் அருகே உள்ள சுப்புராஜ் மருத்துவமனைக்கு பால்பாண்டியை கொண்டு சென்றுள்ளார். அங்கிருந்த மருத்துவர்கள் பால்பாண்டியை பரிசோதித்து அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக கூறியுள்ளனர். அதன்பின்னர் அன்றைய தினமே இரவு 23.30 மணியளவில் அ.சா.1 ராஜா சிவகாசி கிழக்கு காவல் நிலையம் சென்று தாமதமின்றி அ.சா.ஆ–1 புகார் மனுவினை அ.சா.6 உதவி ஆய்வாளர்

காசிராஜனிடம் அளித்ததும், அதன்மீது அ.சா.ஆ–3 முதல் தகவல் அறிக்கையானது பதிவு செய்யப்பட்டுள்ளது.

9. எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், திருச்செந்தூர் கோவிலுக்கு மாலை அணிந்து கொண்டு இருக்கன்குடி கோவிலுக்கு பாதையாத்திரையாக சென்றோம் என அ.சா.2, அ.சா.3 ஆகிய இருவரும் சாட்சியம் அளித்திருப்பது சந்தேகத்திற்கு இடமளிக்கிறது என்று வாதிட்டார். திருச்செந்தூர் முருகன் கோவிலுக்கு மாலை அணிந்து செல்லும் பக்தர்கள் திருச்செந்தூர் கோவிலுக்கு மட்டுமே செல்வார்கள் என்பது ஏற்புடைய வாதம் அல்ல. திருச்செந்தூர் முருகன் கோவிலுக்கு மாலையணிந்து பாதையாத்திரையாக நடந்து செல்லும் போது வழியில் உள்ள கோவில்களுக்கும் சென்று வழிபாடு செய்வது வழக்கமான நிகழ்வுதான். அதன்படிதான் திருச்செந்தூர் முருகன் கோவிலுக்கு மாலை அணிந்திருந்த பால்பாண்டி பாதையாத்திரையாக செல்லும்போது இருக்கன்குடி மாரியம்மன் கோவிலுக்கும் சென்றுள்ளனர். எனவே திருச்செந்தூர் முருகன் கோவிலுக்கு மாலை அணிந்ததாக சொல்லும் அ.சா.2 கனி, அ.சா.3 மணிகண்டன் ஆகிய இருவரும் மாரியம்மன் கோவிலுக்கு பாதையாத்திரையாக சென்றார்கள் என்று கூறுவது ஏற்புடையதல்ல என்ற எதிரி தரப்பு வழக்கறிஞரின் வாதம் ஏற்கத்தக்கதாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

9.1. திருச்செந்தூர் முருகன் கோவிலுக்கு மாலை அணிந்து கொண்டு 04.01.2020 ஆம் தேதியன்று இரவு 09.50 மணியளவில் இருக்கன்குடிக்கு பாதையாத்திரையாக நாங்கள் நடந்து சென்ற போது, நாரணாபுரம் சாலையில் செவன்த்டே பள்ளி அருகே எங்களுடன் பாதையாத்திரை வந்த பால்பாண்டி மீது இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதென அ.சா.2 கனி, அ.சா.3 மணிகண்டன் ஆகிய இருவருமே கூறுகின்றனர். விபத்தின் போது செவன்த்டே பள்ளி அருகே ஒரு பட்டாசு கடையில் தனது நண்பர்களுடன் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த அ.சா.4 வரதராஜன், விபத்தில் பால்பாண்டி அடிப்பட்ட தகவலை பால்பாண்டியின் அண்ணனான

அ.சா.1 ராஜாவிற்கு போன் மூலம் கூறியுள்ளார். அ.சா.ஆ–4 மாதிரி வரைபடத்தில் சிவகாசி நாரணாபுரம் சாலையில் செவன்த்டே பள்ளி அருகே விபத்து நடந்ததாக காண்பிக்கப்பட்டுள்ளது. விபத்தில் அடிபட்ட பால்பாண்டி 04.01.2020 ஆம் தேதியன்று இரவு 10.20 மணியளவில் இறந்த நிலையிலும், எதிரியான அந்தோனிகுரூஸ் என்பவர் இரவு 10.45 மணியளவில் காயமடைந்த நிலையிலும், சிவகாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்பதை அ.சா.ஆ.6 எதிரி அந்தோணிகுரூஸின் விபத்து பதிவேடும், அ.சா.ஆ.7 இறந்துபோன பால்பாண்டியின் விபத்து பதிவேடும் தெளிவாக கூறுகின்றன.

9.2. மேலும் எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், பார்வைமகஜர் சாட்சியான அ.சா.5 முருகன் என்பவர் தனது சாட்சியத்தில், சிவகாசி கிழக்கு காவல் நிலையத்தில் வைத்துதான் அ.சா.ஆ.2 பார்வைமகஜர் ஆவணத்தில் நானும், ராஜா என்பவரும் கையொப்பம் செய்து கொடுத்தோம் என தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார். எனவே அ.சா.ஆ.2 பார்வைமகஜர் சம்பவயிடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்பது நிரூபணமாகிறது என்று வாதிட்டார். அ.சா.5 முருகன் தனது சாட்சியத்தில், 05.01.2020 ஆம் தேதியன்று இரவு 12.45 மணியளவில் இருசக்கர வாகனத்தில் நாராணபுரத்திலிருந்து பர்மா காலனியில் உள்ள எனது வீட்டிற்கு வந்து கொண்டிருந்தேன். அப்போது எனக்கு தெரிந்த ராஜா என்பவர் என்னுடன் வந்தார். அப்போது உதவி ஆய்வாளர் ஒருவர் விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு படம் வரைந்தார். பின்னர் என்னையும் ராஜாவையும் சிவகாசி கிழக்கு காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றனர். அங்கு வைத்து பார்வைமகஜர் ஆவணத்தில் நானும், இராஜாவும் கையொப்பம் செய்தோம் என்று கூறுகிறார். சிவகாசி கிழக்கு காவல் நிலையத்தில் வைத்தே பார்வைமகஜர் ஆவணத்தில் கையொப்பம் செய்ததாக அ.சா.5 முருகன் சாட்சியம் அளித்திருப்பினும் விபத்தில் நடந்த இடத்தை உதவி ஆய்வாளர் பார்வையிட்டு படம் வரைந்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் பார்வை மகஜர் ஆவணத்திலும் 05.01.2020 ஆம் தேதி 00.45 மணியளவில் அது தயார் செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து விபத்து நடந்த இடத்தினை 05.01.2020 ஆம் தேதி

இரவு 00.45 மணியளவில் அ.சா.–5 முருகன் மற்றும் சாட்சி ராஜா ஆகியோர் முன்பு சிவகாசி கிழக்கு காவல் நிலையத்தினர் பார்வையிட்டுள்ளனர் என்பது நிரூபணம் ஆகிறது. எனவே காவல் நிலையத்தில் வைத்து பார்வைமகஜர் ஆவணத்தில் அ.சா.5 முருகன் சாட்சியம் அளித்திருப்பினும் அது அரசு தரப்பு வழக்கினை பாதிக்காது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

10. மேற்கண்ட அரசு தரப்பு சாட்சியங்களின் பரிசீலனையிலிருந்து, 04.01.2020 ஆம் தேதியன்று இரவு சுமார் 09.45 மணியளவில் இறந்து போன பால்பாண்டி என்பவர் அசா.2 கனி, அ.சா.3 மணிகண்டன் ஆகியோருடன் இருக்கன்குடி மாரியம்மன் கோவிலுக்கு பாதையாத்திரையாக நடந்து சென்ற போது நாரணாபுரம் சாலையில் செவன்த்டே பள்ளி அருகில் ஏற்பட்ட இருசக்கர வாகன விபத்தில் அடிப்பட்டு இறந்து போயுள்ளார் என்பது அரசு தரப்பு சாட்சியங்களின் வழியே இந்நீதிமன்றத்திற்கு நன்கு தெரியவருகிறது.

11. இவ்வழக்கின் விபத்தின் காரணமாகத்தான் பால்பாண்டி இறந்துபோனார் என்பது நிரூபணமான நிலையில், எதிரியின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவினால்தான் விபத்து நிகழ்ந்ததா? என்பது குறித்த அரசு தரப்பு சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், விபத்தினை ஏற்படுத்தியதாக கூறப்படும் இருசக்கர வாகனத்தை எதிரி அந்தோணிகுரூஸ் என்பவர்தான் ஓட்டி வந்தார் என எதிரியை அடையாளப்படுத்தி அ.சா.2 கனி, அ.சா.3 மணிகண்டன் ஆகிய இருவரும் சாட்சியம் அளித்திடவில்லை. இது அரசு தரப்பு வழக்கினை சந்தேகத்திற்குள்ளாக்குகிறது என வாதிட்டார். அ.சா.2 கனி, அ.சா.3 மணிகண்டன் ஆகிய இருவருடன் பாதையாத்திரையாக மாரியம்மன் கோவிலுக்கு சென்றபோதுதான் பால்பாண்டிக்கு விபத்து ஏற்பட்டு இறப்பு நிகழ்ந்துள்ளது. எனவே அ.சா.2 கனி, அ.சா.3 மணிகண்டன் ஆகிய இருவரது சாட்சியங்களும் ஒருசேர பரிசீலிக்கப்பட்டது.

12. அ.சா.2 கனி தனது சாட்சியத்தில், 04.01.2020 ஆம் தேதி இருக்கன்குடி பாதையாத்திரையாக நான், அ.சா.2 மணிகண்டன் பால்பாண்டி ஆகியோர் நடந்து சென்றோம். அன்று இரவு சுமார் 9.50 மணியளவில் நாரணாபுரம் செல்லும் சாலையில் செவன்த்டே பள்ளி அருகில் சாலையின் இடது புறமாக சென்று கொண்டிருந்தோம். அப்பொழுது பால்பாண்டிக்கு வலதுபுறம் நானும், இடது புறம் மணிகண்டனும் நடந்து சென்றோம். எங்களுக்கு பின்னால் வந்த இருசக்கர வாகனம் ஒலி எழுப்பாமல் வந்து எங்களுடன் நடுவில் வந்த பால்பாண்டியின் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றும், விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார். வலது பக்கம் உள்ள பள்ளத்தில் விழுந்து விட்டார். அதனால் அவரை நான் பார்க்கவில்லை என்றும் கூறியுள்ளார். அதேபோன்று மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 மணிகண்டன் தனது சாட்சியத்தில், விபத்தில் அடிபட்ட பால்பாண்டியை தூக்குவதில் கவனம் செலுத்தியதால் விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தில் வந்த நபர்களின் முகத்தை சரியாக அடையாளம் காண இயலவில்லை என்றும் கூறியுள்ளார். அ.சா.2, அ.சா.3 ஆகியோரது சாட்சியங்களிலிருந்து விபத்து நடந்த பின்னர் அவர்கள் இருவரும் தங்களுடன் வந்த பால்பாண்டியை தூக்கி மருத்துவமனைக்கு கொண்டு செல்வதில் கவனம் செலுத்தியதால் விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தில் வந்த எதிரியை அடையாளம் காண்பதில் கவனம் செலுத்தவில்லை என்பது தெரிய வருகின்றது.

13. இந்நிலையில் அ.சா.ஆ.1 புகார்மனுவை அளித்த அ.சா.1 ராஜா தனது சாட்சியத்தில், என் தம்பிக்கு பின்னால் வந்த எதிரி அந்தோணி குரூஸ் மது போதையில் இருசக்கர வாகனத்தில் முகப்பு விளக்கு இல்லாமல் பின்னால் இருவரை அமர வைத்துக் கொண்டு வந்து என் தம்பி மீது மோதியதில் விபத்து ஏற்பட்டது என்று சொன்னார்கள் என சாட்சியம் அளித்துள்ளார். விபத்தின்போது சம்பவயிடத்திற்கு அருகில் இருந்த பட்டாசு கடையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த அ.சா.4 வரதராஜன் தனது சாட்சியத்தில், விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபரும் அடிபட்டு கீழே மயக்கமாகி கிடந்தார். விபத்து ஏற்படுத்திய இருசக்கர

வாகனத்தை ஓட்டி வந்த நபர் கல்போதுவை சார்ந்த எதிரி அந்தோணிகுரூஸ் என தெரிந்து கொண்டதாக எதிரியை அடையாளப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளார்.

14. விபத்தில் எதிரிக்கும் அடிபட்டதென கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 கனி, அ.சா.3 மணிகண்டன், அ.சா.4 வரதராஜன் ஆகியோர்கள் சாட்சியம் அளித்துள்ளனர். 04.01.2020 ஆம் தேதியன்று இரவு 9.45 மணியளவில் விபத்து நடந்த பின்னர் விபத்தில் அடிபட்ட பால்பாண்டி 04.01.2020 ஆம் தேதியன்று இரவு 10.20 மணியளவில் இறந்த நிலையிலும், எதிரியான அந்தோனிகுரூஸ் என்பவர் இரவு 10.45 மணியளவில் காயமடைந்த நிலையிலும், சிவகாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்பதை அ.சா.ஆ.6 எதிரி அந்தோணிகுரூஸின் விபத்து பதிவேடும், அ.சா.ஆ.7 இறந்துபோன பால்பாண்டியின் விபத்து பதிவேடும் தெளிவாக கூறுகின்றன. மேற்கண்ட அரசு தரப்பு சாட்சியங்களின் பரிசீலனையிலிருந்து விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தினை எதிரியான அந்தோனிகுரூஸ் என்பவர்தான் ஓட்டிச் சென்றுள்ளார் என்பதும், விபத்தில் எதிரிக்கும் காயங்கள் ஏற்பட்டு, சிவகாசி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்பதும் தெளிவாக நிரூபணம் ஆகிறது. எனவே, விபத்தின்போது, இறந்துபோன பால்பாண்டியுடன் இருந்ததாக கூறப்படும் அ.சா.–2 கனி, அ.சா.–3 மணிகண்டன் ஆகிய இருவரும் சம்பவத்தின்போது எதிரியை பார்க்கவில்லை என்று சாட்சியம் அளித்திருப்பது அரசு தரப்பு வழக்கினை பாதிக்காது என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

15. மேலும், அ.சா.–3 மணிகண்டன் தனது சாட்சியத்தில், "எங்களுக்கு பின்புறமாக வந்த இருசக்கர வாகனம் நடுவில் வந்த பால்பாண்டி மீது மோதி, பால்பாண்டியை தூக்கி வீசியது. அதில் பால்பாண்டியின் ஒருபக்க காதின்பகுதி தனியாக கிழிந்து தொங்கியது. மூக்கிலிருந்து இரத்தம் வழிந்தது. விபத்து ஏற்படுத்திய இருசக்கரவாகனத்தில் வந்த இரண்டு நபர்களும் அதிக மதுபோதையில் இருந்தார்கள்" என சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.ஆ.–9 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில், சம்பவத்தின்போது எதிரி அந்தோனி குரூஸ் ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தின் முன்முகப்பு விளக்கு கண்ணாடி,

முன்வலதுபக்க இன்டிகேட்டர், முன் முகப்பு விளக்கின் வலது பக்க வைஸர் (Visor) ஆகியன சேதமடைந்து காணப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

16) இந்நிலையில் அ.சா.ஆ.6 எதிரி அந்தோனி குரூஸ் என்பவரது விபத்து பதிவேடு பரிசீலிக்கப்பட்டது. அதில் எதிரி அந்தோனிகுரூஸ் மதுபோதையில் (Under the influence of Alcohal) மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதிலிருந்து சம்பவத்தின்போது, இரவு நேரத்தில் எதிரி மது அருந்திய நிலையில், கவனக்குறைவாக தனது இருசக்கர வாகனத்தை அதிவேகமாக ஓட்டிச் சென்று பாதயாத்திரையாக நடந்து சென்ற பால்பாண்டி மீது மோதியதாலேயே அவர் தூக்கி வீசப்பட்டு, சம்பவ இடத்திலேயே இறந்துபோய் உள்ளார் என்பதை அரசு தரப்பில் தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்துள்ளனர் என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. எனவே எதிரி அந்தோணி குரூஸ் மது அருந்திய நிலையில் தனது இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிச் சென்று சாலையில் நடந்து சென்ற பால்பாண்டி என்பவர் மீது மோதி ஏற்படுத்திய விபத்தில் பால்பாண்டி இறந்துபோனார் என்ற எதிரி மீது சுமதப்பட்ட இதச பிரிவு 304(ஏ) உ/இ மோட்டார் வாகன சட்டம் பிரிவு 185 இன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

17. எதிரியின் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவு 304(ஏ) உ/இ மோட்டார் வாகன சட்டம் பிரிவு 185 இன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசுத்தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரியை குற்றவாளி என தீர்மானித்து எதிரிக்கு அளிக்கப்படவிருக்கும் தண்டனை குறித்து எதிரியிடம் வினவியபோது, "எதிரி தன் மீது முன் குற்ற வழக்கு எதுமில்லை என்றும், இனி வரும் காலத்தில் இது போன்று எந்த குற்ற செயலிலும் ஈடுபடமாட்டேன் என்றும், தனது வருமானத்தை சார்ந்தே தன்னுடைய குடும்பம் உள்ளது என்றும், தனக்கு குறைந்தபட்ச தண்டனை விதிக்கும்படியும் வேண்டினார்".

18) அரசு தரப்பு குற்றவியல் வழக்கறிஞர் எதிரியின் குற்றச்செய்கையானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிக்கு அதிகபட்ச தண்டனை விதிக்கவேண்டுமென்று வாதிட்டார். எதிரியின் வேண்டுகோள் பரிசீலனை செய்யப்பட்டது. வழக்கின் தன்மை மற்றும் எதிரியின் குடும்ப சூழல்நிலையை கருத்தில் கொண்டும் எதிரியின் மீதான குற்றத்திற்கு கீழ்காணும் தண்டனையினை விதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

இறுதியாக, எதிரியின் மீதான இதச பிரிவு 304(A) மற்றும் மோட்டார் வாகன சட்டப் பிரிவு 185 இன் கீழான குற்றச்சாட்டுக்களை பொறுத்து எதிரியை குற்றாவளி என தீர்மானித்து எதிரியின் மீதான இதச பிரிவு 304(A) இன் கீழான குற்றத்திற்கு ஒருவருடம் மெய்க்காவல் சிறை தண்டனையுடன் ரூ.1000/- அபராதம் விதித்தும், அபராதத்தொகையை செலுத்தத்தவறினால் ஒரு மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், மேலும் மோட்டார் வாகன சட்டம் பிரிவு 185 இன் கீழான குற்றத்திற்கு ரூ.1000/- அபராதம் விதித்தும், அபராதத்தொகையை செலுத்தத்தவறினால் ஒரு மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும் கு.வி.மு.ச பிரிவு 255(2) இன் கீழ் தண்டனை வழங்கி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரி ஏற்கனவே இவ்வழக்கில் நீதிமன்ற காவலில் இல்லாததால் கு.வி.மு.ச பிரிவு 428 இன் கீழ் உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

ஆ) வழக்கு சொத்து ஏதும் இல்லை என்பதால் வழக்கு சொத்து குறித்து எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

இ) இந்த வழக்கில் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு எதிரியால் எழுதி கொடுக்கப்பட்ட பிணையப் பத்திரத்தினை ரத்து செய்ய உத்தரவிடப்படுகின்றது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு பின் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்த

பின்னர் இன்று 2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VIJAYA BHARATHI Digitally signed by VIJAYA BHARATHI

நீதித்துறை நடுவர் எண்.2,
சிவகாசி.

**<u>சாட்சி மற்றும் சான்றாவணப்பட்டியல் :</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள் :</u>**

அ.சா.1 ராஜா
அ.சா.2 கனி
அ.சா.3 மணிகண்டன்
அ.சா.4 வரதன் (எ) வரதராஜன்
அ.சா.5 முருகன்
அ.சா.6 காசிராஜன் (உதவி ஆய்வாளர்)
அ.சா.7 இமானுவேல் ராஜ்குமார் (காவல் ஆய்வாளர்)

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :</u>**

அ.சா.ஆ.1 புகார்மனு
அ.சா.ஆ.2 பார்வைமகஜர்
அ.சா.ஆ.3 முதல்தகவல்அறிக்கை
அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம்
அ.சா.ஆ.5 பிரேத விசாரணை அறிக்கை
அ.சா.ஆ.6 எதிரியின் விபத்து பதிவேடு
அ.சா.ஆ.7 இறந்துபோன பால் பாண்டியின் விபத்து பதிவேடு
அ.சா.ஆ.8 பிரேத பரிசோதனை அறிக்கை
அ.சா.ஆ.9 மோட்டார் வாகன ஆய்வறிக்கை (டி.என்.39 பிடி 1251 இருசக்கர வாகனம்)

**<u>அரசு தரப்பு சான்று பொருள் :</u>** இல்லை.

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்</u>** : இல்லை

VIJAYA BHARATHI Digitally signed by VIJAYA BHARATHI

நீதித்துறை நடுவர் எண்.2,
சிவகாசி.

**பின்குறிப்பு :**

1. இவ்வழக்கில் சாட்சிகள் விசாரணைக்காக 3 தினங்களுக்கு மேலாக நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. வழக்கின் எதிரி விசாரணையின்போது பிணையில் இருந்தார்.
3. வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு அறிவிக்கப்பட்டது.

VIJAYA BHARATHI
Digitally signed by VIJAYA BHARATHI

நீதித்துறை நடுவர் எண்.2,
சிவகாசி.